2014 பிப்ரவரி 3]

மற்றும் இரண்டாவது நிலைகள் முடிவடைந்த நிலையில் இருக்கின்றன. அதேபோல மூன்று மற்றும் நான்காவது நிலைகளுக்கும் உடனடியாக நிதி ஒதுக்கி வேளாண் மக்களின், அந்தப் பகுதியினுடைய மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் விதமாக அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கோரிக்கை வைத்து வணங்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

46—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***493—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செக்கானூரணியில் கள்ளர் சீரமைப்புத் துறையின்மூலம் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செக்கானூரணி மற்றும் உசிலம்பட்டி, தேனி மாவட்டத்தில், ஆண்டிப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் உயர் கல்வித் துறையின்மூலம் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 17 உயர் கல்வித் துறை (பி2), நாள் 31–1–2013 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2014 பிப்ரவரி 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதிகளையெல்லாம் முன்னேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் கல்வித் துறையிலே மிகப் பெரிய புரட்சிகளை ஏற்படுத்திவருகின்ற தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், நாளைய இந்தியத் திருநாட்டினுடைய பிரதமர், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, மதுரை மாவட்டம், செக்கானூரணி, கொக்குளம் பகுதியில், பாலிடெக்னிக் கல்லூரி தொடங்கப்பட்டு, மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கட்டடப் பணிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலும் ஒரு கல்லூரியை வழங்கியதோடு ஒரு பாலிடெக்னிக் கல்லூரி கேட்டதற்கு 2 பாலிடெக்னிக் கல்லூரிகளை கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

திருமங்கலத்தில் அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி ஒன்றினை கொடுத்து 'தாய் நானிருக்கிறேன் படிக்க முன்வருகின்ற மாணவர்களையெல்லாம் முன்னேற்ற' என்று புரட்சிகரமான அறிவிப்பினை வழங்கிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மதுரை மாவட்ட மக்களின் சார்பில் நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் நகரத்து மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த, மழைக்காலங்களில் எல்லாம் அச்சுறுத்திக்கொண்டிருந்த கக்கன் காலனி, அண்ணா நகர், மம்சாபுரம் கால்வாய்களைச் சீரமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே ஒரு உத்தரவும், சாத்தங்குடி வரை சென்றுகொண்டிருந்த குண்டாற்றினைச் சீர்செய்து, வெள்ளப்பெருக்கு வருகின்றபோது மக்களைப் பாதுகாக்க உத்தரவிட்டதோடு, திருமங்கலம் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற அரசு ஹோமியோபதி கல்லூரியை மேம்படுத்துவதற்கு மூன்று கோடி ரூபாயையும், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மையம் உருவாக்குவதற்கு ஐம்பது இலட்சம் ரூபாயையும் அளித்ததற்காக தொகுதி மக்களின் சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன்.